(எ) எக்கைத்தொழில்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாடு பொது மக்களின் நலனுக்கு உகிதமானதென சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டதோ அக் கைத்தொழில்கள் ;

(ஏ) சுரங்கங்களின் தொழிலாளர்களையும் பாதுகாப்பையும் ஒழுங்குபடுத்தல் ;

(ஐ) இலங்கை அரசாங்கத்தின் முகவர் நிலையங்களினால் உப்பு உற்பத்தி செய்யப்படுதல், வழங்கப்படுதல், விநியோகிக்கப்படுதல் ; ஏனைய முகவர் நிலையங்களினால் உப்பு உற்பத்தி செய்யப்படுதலையும் வழங்கப்படுதலையும், விநியோகிக்கப்படுவதையும் ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்துதலும் ;

(ஒ) ஏற்றுமதிக்காக அபினை பயிரிடல் ; உற்பத்திசெய்தல் மற்றும் விற்பனை செய்தல் ;

(ஓ) இலங்கை அரசாங்கத்தின் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட கைத்தொழிற் பிணக்குகள் ;

(ஔ) இலங்கை அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்டனவும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் என சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டனவுமான அரும்பொருட்காட்சிச்சாலைகள், போர் நினைவிடங்கள் போன்ற நிறுவனங்கள் ;

(க) இலங்கையின் பரப்பு அளவீடு, இலங்கையின் புவிச்சரிதவியல், தாவரவியல், விலங்கினவியல், மற்றும் மனிதவியல் அளவீடுகள், வளிமண்டலவியல் நிறுவனங்கள் ;

(ங) தேசிய பகிரங்க சேவைகள்; தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு ;

(ச) ஓய்வூதியங்கள் அதாவது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது திரட்டு நிதியத்திலிருந்து கொடுபடற்பாலதான ஓய்வூதியங்கள் ;

(ஞ) பாராளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகர், பிரதிச்சபாநாயகர் என்போரின் சம்பளங்களும் படிகளும் ;

(ட) பாராளுமன்றத்தினதும் உறுப்பினர்களினதும் பாராளுமன்றக்குழுக்களினதும் தத்துவங்களும், சிறப்புரிமைகளும், பாதிப்பின்மைகளும், பாராளுமன்றக் குழுக்கள் அல்லது பாராளுமன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்கள் முன்னிலையில் சான்று கொடுப்பதற்காக அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்காக சமுகந்தரும் ஆட்களின் வரவை வலியுறுத்துதல் ;

(ண) சனாதிபதி மற்றும் ஆளுநர்கள் என்போரின் வேதனாதிகள், படிகள், சிறப்புரிமைகள், வராமைக்கான லீவு தொடர்பான உரிமைகள் ; இலங்கை அரசாங்க அமைச்சர்களின் சம்பளங்களும் படிகளும், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளங்களும், படிகளும், வராமைக்கான லீவு தொடர்பான உரிமைகளும், சேவை நிபந்தனைகளும் ;

(த) மாகாணங்களுக்கிடையிலான குடியகல்வு, மாகாணங்களுக்கிடையிலான தொற்றுநோய்த்தடைத் தனிப்படுத்தல் ;

(ந) இந்த நிரலில் உள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான சட்டங்களுக்கெதிரான தவறுகள் ; அத்துடன்

(ப) ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக, இந்த நிரலில் உள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான கட்டணங்கள்.

### நிரல் III

### ஒருங்கிசை நிரல்

1. திட்டமிடல்—

1 : 1 மாகாண மட்டத்தில் திட்டம் செயற்படுத்தல் ; உபாயங்களை வகுத்தமைத்தலும் கணிப்பீடுசெய்தலும் ;

1 : 2 முன்னேற்றக் கட்டுப்பாடு ;

1 : 3 பகிரங்க, தனியார் துறை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்புச் செய்தல் ;